# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **SC.No. 03/2009**

Prosecution witness : **39**

| | | | |
|---|---|---|---|
| Name: | முகம்மதுமைதீன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A4, A7, A9, A10, A15 present. A6 already died. Others absent. Petition U/s 317 crpc filed and allowed.

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of

**08.02.2023**

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் ஆபாபள்ளிவாசல் தெருவில் குடியிருந்துவருகிறேன். 2007 ம் வருடம் கூலக்கடை பஜாரில் அரிசி கடை நடத்திவந்தேன். நான் 11.00 மணிக்கு கடையை திறந்து இரவு 9.00 மணிக்கு கடையை மூடுவேன். கூலக்கடை பஜார் அருகில் மேலமுத்தாரம்மன் கோவில் உள்ளது. 2007 ம் ஆண்டு சம்பவத்தின்போது நான் ஒருவாரம் கடையை திறக்கவில்லை நான் கடை திறக்க வரும்போது பிரச்சனை ஏற்பட்டு கடையை அடைத்திருந்தார்கள். எனவே, நானும் கடையை திறக்கவில்லை. இரண்டு குழுக்களாக சண்டைபோட்டு இறந்துபோனதாக கேள்விப்பட்டேன். நான் சம்பவம் எதையும் பார்க்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

என்னை 2007 ம் வருடம் ஆகஸ்டு மாதம் போலீசார் விசாரித்தபோது 14.08.2007 ம் தேதி காலை 10.15 மணியளவில் என் கடையின் வடக்கு மேலமுத்தாரம்மன் கோவில் அருகில் இந்துக்களும், இஸ்லாமியர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக கேள்விப்பட்டதும் நான் கடையை அடைத்துவிட்டு வீட்டிற்கு போய் விட்டேன் என்றும் போலீசார் விசாரணையில் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் கத்தியால் வெட்டி கலகம் செய்வதை நான் தொலைவில் இருந்து பார்த்ததாக கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது உண்மைக்கு மாறாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இஸ்லாமியர்கள் மீதான வழக்கு இந்நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது என்று எனக்கு தெரியாது. தற்போது இரண்டு பிரிவினக்கும் இடைய குற்றவழக்கு சம்பந்தமாக சமரசம் ஏற்பட்டு அதன் தொடர்ச்சியாக ஒருவர் மீதான மற்றவர் தொடுத்த வழக்கில் ஒருவருக்கு மற்றவர் ஆதரவாக சாட்சியம் அளிக்க ஏற்பாடு செய்து கொண்டு அதன்அடிப்படையில் என்னையும் இஸ்லாமிய சமுதாயத்தினர் கேட்டு கொண்டதன் பேரில் நான் நடந்த சம்பவத்தை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**